Registered as a News Paper in Ceylon P.M.G. No. H. A. 9/3007 of 1953.

விரோதிஷு (1889) ஆனி மீ 28உ உரப்பமான

இந்துசாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதிஷு ஐப்பசிமீ உஅஉ வெள்ளிக்கிழமை (13 November. 1964) [இல-நடஉ]

சைவ உலகம் உய்யவந்த

சைவப் பெரியார் சிவபாதசுந்தரர்

[வித்துவான். சைவப்புலவர். க. கணபதிப்பிள்ளை]

முற்றொடர்—2

சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களை இந்நாடன்றித் தென்னாடும் போற்றியமைக்குச் சான்றுகள் பலவுள. செல்வி பரஞ்சோதி என்பார் எழுதிய சைவசித்தாந்தம் பற்றிய ஆங்கில நூலுக்குத் தருமபுர ஆதீனத்தார் தக்கதோர் மறுப்பை நம் பெரியாரைக்கொண்டே எழுதுவித்தனர். மறுப்பு அவ்வம்மையாராலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட தென்பதைச் சைவ சித்தாந்த மகா சமாசப் பொன் விழா மலர் சுட்டிக்காட்டுகின்றது. The Saiva School of Hindnism எனப்படும் நூல் இங்கிலாந்திலே பிரசுரஞ் செய்யப்பட்டது. இவர்கள் கடைசியாக எழுதிய நூல் சைவமும் விஞ்ஞானமும் என்பர்.

1921 - ஆம் ஆண்டளவில் இந்துசாதனம் முதலியவற்றில் எழுதிய பல அரிய கட்டுரைகளைச் சென்னை "சைவம்" முதலாம் பத்திரிகைகள் மறுபிரசுரஞ் செய்தன. திராவிடப் பிரகாசிகைக்கு இவர் எழுதிய முன்னுரையில், "ஐந்திணை சிற்றின்பத்தைத் தூலமாகவும், பேரின்பத்தைச் சூக்குமமாகவும் கூறி இன்பம் - வீடாகிய இரண்டையும் விளக்கும்" எனத் திட்பநுட்பமாக மொழிந்துள்ளார். தொல்காப்பியம் ஐந்திணை நுதலிய பொருள் சிற்றின்பமன்று; பேரின்பம் என்பதே என்பதை இனிமேலாவது ஆராய்ச்சியாளர் கருத்திற் கொள்வார்களாக.

"மெய்யறிவு பெறுதார் பாக்களை அருட்பாவெனல் அருட்பா நிந்தையும் சிவனடியார் நிந்தையும் சிவநிந்தையுமாம். கோயில், குருமார் முறைகேடாக நடக்குமிக் காலத்தில் சைவத்தைத் தாங்குவன அருட்பாக்களே" எனக் கூறியிருக்கும் அருமை, நாவலர் பெருந்தகையை அடியொற்றி, சைவப்பெரியார் சைவப்பணி செய்தார் என்பதை ஞாபகஞ் செய்கின்றதல்லவா? இதனாலன்றோ திராவிடப் பிரகாசிகையின் பதிப்பாளர் திரு. அ. சிவகுருநாதன், "வைதிக சித்தாந்த சைவ பரிபாலன விரதத்தினைத் தமக்குப் பெருங்கடப்பாடாகவும் சிறப்பாகவும் கொண்டு பொழுதுபோக்கும் கருணை வள்ளலாகிய புலோலி நகர் ஸ்ரீமத். சு. சிவபாதசுந்தரம்பிள்ளை பி ஏ. அவர்கள்" எனக் குறிப்பிடுகின்றார்.

மேற்போந்த நூலை மறுபிரசுரஞ் செய்தோர், எக்காரணங்கொண்டோ யாம் அறியேம். (மதிப்புரை Introduction பதிப்புரை என்பவற்றைப் புதிய பதிப்பிற் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள், அங்ஙனம் சேர்ப்பது சைவப்பணி,

நம் யாழ்ப்பாணத்துக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என்பது சைவச்சான்றோர் கொள்கை. இக்கொள்கையில் சைவப்பெரியார் ஊறித் திளைத்தவர். கந்தபுராண விளக்கம், சுப்பிரமணியப்பெருமான் கொண்ட திருப்பெருவடிவம் என்பன இதற்குச் சான்று. இந்நூல்களும் திருவருட்பயன் உரையும் நம்நாடு கண்ட ஒப்பற்ற உரையாசிரியர் இவர் என்பதை நன்கு காட்டுகின்றன. இற்றைஞான்று "குமரகுருபர"னில் வெளிவரும் திருவருட்பயன் தெளிவுரையின் ஆசிரியர் சிவபாதசுந்தரனாரின் உரை மாண்பை இடந்தோறுஞ் சுட்டிக் காட்டிக் கொண்டு செல்கின்றார்.

இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த திருவருட்பயன்உரை நூல் சமீபகாலம்வரை இந்து சமயங் கற்போருக்கு உதவி நூலாக இருந்து வந்தது. இன்று நிலைமை மாறிவிட்டது! மாணவரன்றி ஆசிரியர் தாமும் அறியா நிலையை அத்திருநூல்எய்திவிட்டது. இது பெருமைப்படத்தக்க விஷயமன்று.

சைவப்பெரியாரால் எழுதப்பட்டுச் சேர். பொன். இராமநாதனால் அறிமுகஞ் செய்யப்பட்ட சைவ போதமும் நாவலர் பெருமானது சைவவினாவிடையும் எக்காலமும் சைவச் சிறார் கையிலே தவழவேண்டியதிருநூல்கள்; இளம் பிஞ்சு உள்ளங்கட்கென மிக்க மதிநுட்பத்தோடு எழுதப்பட்டவை; பேருண்மைகள் யாவற்றையும் அடக்கியபூதக்கண்ணாடிகள். இவை இன்று எங்கேயாவது தலைக்காட்டுவதாகக் காணோம். நூல்கள் எத்தனைதாம் புற்றீசல்போலத் தோன்றினாலும் இந்நூல்களுக்கு அவை ஈடாக மாட்டா. இ[illegible]

நற்சிந்தனை

(இல்வாழ்க்கை)

பொறி வென்றார் தாமும்
பொருவரோ நல்ல
நெறியில் லறத்தாரை நேர்.

பாடசாலைகளின்நேரசூசிக்குப் புறம்பான நேரம்

இந்துசமயவகுப்புகள்

1963 - 64 ம் நிதி ஆண்டில் மேற்கூறப்பட்ட வகுப்புகளை நடத்திவந்தவர்கள் அவ்வகுப்புகளை மேலும் நடத்த உதவு முகமாக அரசாங்கத்தால் ரூபா 20,000 - ம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வகுப்புகளை மேலும் நடத்த, அரசாங்கம் ஒதுக்கிய இப் பணத்திலும் உதவி தேவைப்படுவோர், இலங்கையின் எப்பாகத்திலுமுள்ள வகுப்புகளுக்கு விண்ணப்பம் செய்யலாம்,

2. பாடசாலைகளில் பிள்ளைகளை எவ்வாறு, தரத்துக்கேற்ப, வெவ்வேறு வகுப்புகளாகப் பிரித்து, வெவ்வேறு ஆசிரியர்களால் பயிற்றப்படுகிறார்களோ அதுபோன்று இவ்வகுப்புகளும் பிரிக்கப்பட்டு வெவ்வேறு ஆசிரியர்களால் பயிற்றப்படுபவையாய் இருத்தல் வேண்டும்.

3 ஒவ்வொரு வகுப்புக்கும் வெவ்வேறு இடாப்பு வைத்துப் பிள்ளைகளின் வரவு அதில் தவறாது பதியப்பட்டிருத்தல்வேண்டும். கலாச்சார அதிபரோ அல்லது அவரின் பிரதிநிதியோ உத்தியோகதோரணையில் சுற்றுப் பிரயாணம்செய்யும் நாட்களில் இவ்வகுப்புகளையும் இடாப்புகளையும் பார்வையிடுவார்.

4. மேற்கூறிய விதிகளுக்கு அமைய வகுப்புகளை இலங்கையில் நடத்திவரும் அதிபர்கள், பின் வரும் விலாசத்துக்கு எழுதி விண்ணப்பப் பத்திரம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

கௌரவ செயலாளர்,
இந்துசமய ஆலோசனைச்சபை,
60, இராமக்கிருஷ்ணரோட்,
கொழும்பு 6.

அடிப்படை - அத்திபார — முதல் நூல்கள், சைவ வுலகம் கவனிக்குமா(க)

ஆறுமுகநாவலர் பெருமான் தோன்றிய இந்நாட்டிலே தோன்றி அரை நூற்றாண்டு காலமாகச் சைவசமய விருத்திக்காக அல்லும் பகலுந் தொண்டாற்றிய சிவபாதசுந்தரனாரைச் சைவ வுலகம் சைவப் பெரியாரென அன்பொழுக உரைப்பது சாலப் பொருத்தமானதே. தமிழ்நாடு ஒரு ஈ. வெ. ரா. பெரியாரை ஒரு தமிழ்ப் பெரியாரைக் கண்டது; [illegible] சைவப்

தமிழ் நாட்டில்

சைவமும் தமிழும் நாவலரால் வளர்ந்தன

நாடெங்கணும் நாவலர்தினம் கொண்டாடுக

வடமாநிலச் சைவஇளைஞர் மாமன்றத்தின் வேண்டுகோள்

பல நூற்றாண்டு காலமாக அந்நியர் ஆட்சியால் ஈழநாட்டில் தமிழும் சைவசமயமும் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தன. பல சூழ்ச்சிகளால் அந்நிய சமயமாகிய கிறிஸ்தசமயம் இங்கு பரப்பப்பட்டது. நம்மவர் பலரும் பட்டம் பதவிகளுக்காக எமது சமயத்தையும், கலாச்சாரத்தையும் மறந்தனர். அப்படியான காலத்திலும் ஒருசிலர் சைவத் தமிழ்க் கலாச்சாரங்களைப் பேணிப் பாதுகாத்து வந்தனர். அப்பெரியார்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது.

தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் இருள்சூழ்ந்திருந்த அக்காலத்தில் நாவலர்பெருமான் தோன்றினார். அவர் தோன்றியிராவிட்டால் இன்று நாம் எல்லாரும் கிறிஸ்தவராகவே இருந்திருப்போம். நாவலர் அவர்கள் தனித்து நின்று தமிழுக்கும் சைவத்துக்கும் அருந்தொண்டாற்றினார். தமிழ்நாடு முழுவதையும் தட்டியெழுப்பினார்

தமிழ் இலக்கண இலக்கியங்களை மிகக் குறுகிய காலத்தில் கற்றுப் பெரும்புலவராக விளங்கினார். ஏட்டுவடிவில் இருந்து அழியும் நிலையிலிருந்த தமிழ் நூல்கள் பலவற்றையும் புத்தகரூபத்தில் மருந்துக்கும் பிழையின்றி வெளியிட்டு தவினார். மாணவர்களுக்கேற்ற முறையில் இலகுவான தமிழ்வசன நடையில் புத்தகங்களை ஆக்கினார். இலங்கை இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள தமிழ் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்துள்ளார். கிறிஸ்துமத நூலாகிய பைபிளைத் தூய தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

நீதியையும் நேர்மையையும் தமிழ்மக்கள் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமெனஎடுத்துக் காட்டினார். பிரசங்கங்கள் மூலமாக நாட்டின் சீர்கேடுகளையும் சமய உண்மைகளையும் எடுத்துவிளக்கினார். யாழ்ப்பாண மக்களைச் சீர்திருத்தமான சைவமுறையில்நடக்கச் செய்தார். இதனால் யாழ்ப்பாணம் இன்றும் பெருமை பெற்று விளங்குகின்றது.

தமிழ் சமயப் பணிகளில் மாத்திரமன்றி பொதுப்பணியிலும் முன்னின்றுழைத்தார். அரசாங்க அதிகாரிகள் அக்காலத்தில் செய்துவந்த அநியாயங்களை அம்பலமாக்கி மக்களுக்கு நீதி கிடைக்கச்செய்தார். அத்துடன் அமையாது அரசியலிலும் பெரும்பங்கு கொண்டுழைத்தார். சேர் பொன். இராமநாதன் அவர்களை இலங்கைச்சட்டசபைப் பிரதிநிதியாக்கப் பலகூட்டங்கள் வைத்து அவரை வெற்றியீட்டச் செய்தார்.

தமிழும் சைவமும் என்றும் நிலையாக வளர்ந்து வருவதற்குச் சைவப்பாடசாலைகளை நிறுவினர். உயர்தரக்கலைகளைத் தமிழில் போதிக்க ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென விரும்பினர்.

இவ்வளவு அருங்குணங்களும் பெரும் மூளைசாலியுமான பெரியார் வேறு நாடுகளில் தோன்றியிருந்தால் எவ்வளவோ பெருமையைப் பெற்றிருப்பார். அவரது அருமை பெருமைகளை நாம் இன்றும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இனிமேலாகுதல் தக்கது செய்வோமாக.

நாவலர்பெருமானது நினைவு நாள் கொண்டாட்டம் நிகழும் 26-11-64 ஆகும், அத்தினத்தைத் தமிழ் மக்கள் யாவரும் சிறப்புடன் கொண்டாட முன்வர வேண்டும்.

சைவப்பாடசாலைகள், கலாசாலைகள், சனசமூக நிலையங்கள் இத்தினத்தைச் சிறப்புடன் கொண்டாட வேண்டும் எனவும் பத்திரிகைகள் யாவும் அத்தினத்தில் ஞாபகமலர் வெளியிட்டு உதவ வேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

—0—

பெரியாரைக் கண்டபெருமை யுடையது. இஃது ஆறுமுக நாவலரைத் தோற்றுவித்த கந்தபுராணக்கலாசாரப்பெறுபேறு போலும்!

ஆனால் ... சிந்திக்க வேண்டிய ஒன்று இன்று உண்டு. தென்னாட்டில் அறிஞர்கள் மறைந்தும் மறையாமல் வாழுகின்றார்கள். நூல் வடி

தொடர்ச்சி 3ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

குரோதி ஆ ஐப்பசி மீ
உகஉ வெள்ளிக்கிழமை

முருகப் பெருமானது திருப்பெரு வடிவம்

மாயையின் குமாரனாகிய சூரபன்மன் தன்னுடைய சேனைகள் யாவும் அழிந்து போகத் தனியே நின்று போர் செய்தான். பல மாயங்களைச் செய்யக்கருதி பல உருவங்களைக்கொண்டு தோன்றினான். சுப்பிரமணியக் கடவுள் அவற்றையெல்லாம் பல அம்புகளைச் செலுத்தி அழித்தார். அம்புகள் ஆகாயவழியால்திரும்பிப் பககங்களிலுள்ள அம்புகளோடு குமாரக்கடவுளுடைய தூணியில் விரைவாகப் புகுந்தன. ஞானசத்தியாகிய நெடிய ஒப்பற்ற வேற்படையைத் தாங்கிய குமாரக்கடவுள் சூரபன்மனுடைய முகத்தைப் பார்த்துச் சொல்லியருளுவார். "சூரபன்மனே? முகிலுக்கு இடையிலே தோன்றியழியும் மின்னலைப் போன்ற எண்ணில்லாத வடிவங்களை என் முன்னிலையிற் கொண்டாய், அவற்றையெல்லாம் அழித்தேம். என்றும் உளதாகிய நம்முடைய பெரிய வடிவத்தை நாம் இப்போது கொள்வோம். அதனை நன்றாகப் பார் எனத் திருவாய் மலர்ந்தருளி அவனுக்குச் சிறிதளவு மெய்யுணர்வை அளித்துக் காட்டினார். அவர் கொண்ட வடிவத்தில் ஒலிக்கின்ற கடல்களும் நிலமும் திசைகளும் உலகங்களும் அண்டங்களும் தேவர்களும் ஏனைய வுயிர்களும் மறறெல்லாப் பொருளகளும் பொருந்தியிருந்தன. கருணைகொண்ட கண்களில் சந்திரனும் சூரியனும் காதுகளில் திக்குகளும் அழகிய நெற்றியில் குடிலையும் தலையிலே சிவபெருமானும் முறைப்படி தோன்றினர்.

இவ்வடிவத்தைக் கண்ட சூரபன்மன் குமாரக் கடவுளுடைய அருட் செயலைக் கண்டு அவரே பரமபதியென்பதைஉணர்ந்து பின் வருமாறு போற்றுகின்றான்.

"கோலமா மஞ்ஞைதன்னிற்
குலவிய குமரன்றன்னைப்
பாலனென் றிருந்தேனந்நாட்
பரிசிவை யுணர்ந்திலேன்யான்
மாலயன் றனக்குமேனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய்நின்ற
மூர்த்தியிம் மூர்த்தியன்றோ.

வீரவாகுதேவர் தூது சென்ற காலத்திலும் சிங்கமுகனும் இரணியனும் சூரபன்மனுடன் மந்திராலோசனை புரிந்தகாலத்திலும் குமாரக்கடவுளுடைய பெருமைகளைக் கூறியபொழுது அவன் "கோலவாலெயிறு இன்னமுந் தோன்றிலாக் குதலைப்பாலன்" என்றும் 'பால் நல்வாய்ச் சிறுசேய்' என்றும் குமாரக்கடவுளைக் குறித்துக் கூறினமையை நினைந்து பச்சாத்தாபப்பட்டுக் கூறுகின்றான். குமாரக் கடவுளுடைய திருமேனி கண்ணுக்கேனும் மனத்துக்கேனும் அடங்காதது. 'என்னுடைய கால்கள் இக்கடவுளை வலம்வர நாடுகின்றன, கைகள் இப்பெருமானைத் தொழுதலை நாடுகின்றன. தலை வணங்குதலை நாடுகின்றது. நாக்குத் துதித்தலை நாடுகின்றது. தீமை முழுதும் அகன்று நீங்கி நான் ஆழுதலை நாடுகின்றது. உள்ளம் இவருக்கு அடிமையாய் வாழுதலை நாடுகின்றது'; ஆனால் மானம் என்னைத் தடுத்தது, எனப் பின்னர்க் கூறுகின்றான். முருகப்பெருமான் சூரபன்மனுக்குக் கொடுத்த மெய்யறிவையகற்றி அப்பெரிய வடிவத்தை நீட்கித்து ஒளியையுடைய மயில்வாகனத்தில் இவர்ந்தருளிய வடிவத்தைக் கொண்டு நின்றார். பின்பு சூரபன்மன் நல்லறிவு நீங்க மீண்டும் போர் செய்யத் துணிகின்றான்.

குமாரக்கடவுள் கொண்ட விசுவரூபத்தினால் அவர் அளவிடற்கரிய பெருமையுடையவரென்பதையும், அப்பெருமையை யுணர ஆன்மா தனது சிறுமையையெண்ணி நல்வழிப்படுமென்பதையும் நாம் உணர வேண்டும். காண்பானும் காட்சியும் காட்டுவானும், காட்சிப்பொருளும் ஆகிய இவையெல்லாம் அக்குமாரக்கடவுளேயென்பதையும் நாம் உள்ளத்தில் தெளிந்து அவருடைய திருப்பெருவடிவத்தை வழிபடுநறு கதியடைவோமாக.

—

வரலாற்று நூல்கள் திரிக்கப்படுகின்றன பாடநூல்களும் பாதிக்கப்படுமா ?

தமிழ் மக்களே! விழிப்பாயிருங்கள்!!

—வி. தர்மலிங்கம்

"தமிழினத்தின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களைவேண்டுமென்றே திரித்தும் மறைத்தும் வரலாற்று நூல்களில் எழுதி வருகிறார்கள். இத்தகைய கோழைத்தனமான முயற்சி அரசாங்கத்தின் ஆதரவுடனேயே நடைபெற்று வருகின்றன. அண்மையில் இலங்கைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள வரலாற்று நூலொன்றில் தமிழினத்தை இழிவுபடுத்தும் வகையில் பல வரலாற்றுண்மைகள் மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் எழுதப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. இந்நிலையில் அரசாங்கம் பாடநூல்களைப் பிரசுரஞ்செய்ய முன்வந்தமை குறித்து நாம் மகிழ்ச்சியடைய முடியாது. பாடநூல்களிலுங்கூட இத்தகைய திருகுதாளங்கள் இடம்பெறலாம். எனவே பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாக எழுத்தாளர்களும் மிக்க விழிப்புடனிருக்க வேண்டும்" இவ்வாறு உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் அவர்கள் இனுவில் இளந்தாரிகோவில் சனசமூக நிலைய ஆதரவில் நடைபெற்ற 'உறவும் பிரிவும்' என்ற நூல்வெளியீட்டு விழாவில் தலைமை வகித்த பொழுது குறிப்பிட்டனர்.

—

சிவசுப்ர மண்யனே! போற்றி போற்றி

(அளவையூர் — சஞ்சீவி)

விருத்தம்

மூலமே! பரப்பிரம்ம முதலே! ஞான
மூர்த்தியே! முருகனே! முதிர்ந்த வேத
கோலமே! காருண்ய குமர வேளே!
குருபரனே! நாளோடு கோளின் முன்னைக்
காலமே! கற்பகமே! கந்தா! வள்ளி
காந்தனே! குஞ்சரியின் கணவா! அன்பின்
சீலமே! வேல்மயில் ஜெயம் கொண்டோனே!
சிவசுப்ர மண்யனே! போற்றி போற்றி.

ஜேர்மனியில் வடமொழிக் கல்வி வளர்ச்சி

ஆசிரியர்:
திரு. ஆ. சபாரத்தினம்

மேனாட்டார் ஆங்கிலேயர் மூலமே வடமொழி பற்றியறிந்தனர். பிரஞ்சுக்காரரிடமே ஜேர்மனிய வடமொழியறிஞர் முதலில் கல்விகற்றனர். எனினும் ஜேர்மனியிலேயே வடமொழி ஆராய்ச்சி, வேறெந்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் பார்க்க அதிக ஊக்கமுடனும், பேரார்வத்துடனும், நடாத்தப்பட்டு வருகிறது. ஆகையால் இந்தியாவுக்கு அடுத்தபடியாகச் சமஸ்கிருதத்தின் இரண்டாம் தாயகம் என ஜேர்மனியைக் குறிப்பிடுவது மிகையாகாது. சென்ற நூற்றாண்டில் அமெரிக்க வடமொழியறிஞர் லான்மன் ஜேர்மனியில் பத்தொன்பது பல்கலைக்கழகங்களில் வடமொழித்துறை அமைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி அமெரிக்கர் இவ்விடயத்தில் பின்நிற்பதற்கு வருந்தினார். சென்ற மகா யுத்தத்துக்கு முன் பதினாலு ஜேர்மன் சர்வகலாசாலைகளில் வடமொழித்துறை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்தியாவில் அந்நாளில் அதிகம் இருக்கவில்லை. மகா யுத்தத்தின் பின்னரும் பத்துச் சர்வகலாசாலைகளில் சமஸ்கிருதத்துறையில் பூரண போதனாபீடங்களும், வேறு சிலவற்றில் இரண்டாம்; மூன்றாந்தரத்தில் மதிக்கத்தக்க சமஸ்கிருதத்துறைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

மாக்ஸ்முல்லர். போல்டியூஷேன என்னுமிருவரும் இந்தியரது உள்ளம் கவர்ந்த பேரறிஞர். இந்தியாவுக்குக் காசிநகர்போல ஐரோப்பா முழுவதற்கும் பொன்நகரம் விளங்கிற்று. சமஸ்கிருத ஆராய்ச்சித்துறையில் ஜேர்மனி செய்த அரும்பணிகளைக் குறிப்பிடுவதாயின் தற்கால வடமொழிக்கல்வி வரலாற்றையே எழுத வேண்டும். உலகப்போரின் பின் நிலவிய கஷ்டமான சூழ்நிலையிலும், ஜேர்மனியர் வெகு துரிதமாக கைத்தொழில் வாணிகத் துறையில் தம் பாரம்பரியத் திறமையைக் காட்டியது போலவே வடமொழியாராய்ச்சியிலும் தரம் குறையாது மேலோங்கியுள்ளனர். தாம் சேகரித்து வைத்த பழைய சமஸ்கிருதச்சுவடிகள் அழிந்து விடாது நிலவறைகளிலும், நகரங்களுக்கு வெகுதூரத்தே [illegible] சேமித்துப் பாதுகாத்தனர். மிகப் பெருந்தொகையாகப் பேர்ளின் இராசாங்க நூல் நிலையத்தில் இருந்த சுவடிகள் தற்போது மூன்று இடங்களில் உள, பர்த்ருஹரியின் மகாபாஷ்ய வியாக்கியானம் உலகின் ஒரேயொரு ஏடு பத்திரமாயுள்ளது. கீல், ஹம்பேர்க், பேர்ளின், கொட்டிஞ்ஜான், மார்பேக், ரூபிஞ்ஜன் முதலிய இடங்களில் ஏராளமான சமஸ்கிருதச் சுவடிகள் பட்டியல் தயாரிக்கப்படாமல் இருக்கின்றன. ஹம்பேர்க்கின் நூலகம் மட்டும் குண்டுவீச்சில் அழிந்து விட்டது.

உபநிடதங்களை மிகமிக நேசித்து எழுதிய சமய நோக்குடைய மேல்நாட்டறிஞர் சிலரின் கோபத்துக்கு போல்டியூஷென் ஆளாகினார். கீல் சர்வகலாசாலையின் சம்ஸ்கிருதப் பேராசிரியராக ஓல்டன்பேர்க்கும், பின் ஷ்ரேடரும் இருந்தனர். ஸ்ரேடர் சென்னை அடையாறு நூலகத்தில் பொறுப்பாளராயிருந்தவர். தென்னிந்திய ஓலைச் சுவடிகள் இருநூறு அவரிடம் உள. திராவிட மொழி யூரேபிய மொழித் தொடர்புடையது என்ற கருத்தை வெளியிட்டவர். இவர் பேராசிரியர் பதவியினின்றும் விலகிய பின்னரும் சில மாணவர்க்கு வடமொழி கற்பித்து வருகின்றார்.

ஹம்பேர்க் சர்வகலாசாலையில் உள்ள இந்தியத்துறை மிகப் பழைய தொன்றெனி

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

சைவபரிபாலனசபையின்

சைவப்பணியை ஆதரியுங்கள்

மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் "சிவநெறிக்காவலன்" "சித்தாந்த சிரோமணி" என்னும் பட்டங்களை முறையே திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை யவர்களுக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களுக்கும் வழங்கியதைச் சிறப்பிக்குமாறு ஓர்பாராட்டு விழா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் 17-10-64 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் கொண்டாடப்பெற்றது. சமயப்பண்புகள் குன்றி வரும் இக் காலத்தில் இது போன்ற கொண்டாட்டங்கள் இன்றியமையாது வேண்டப்பெறும். மேலேகண்ட சைவ அன்பர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்து வரும் சிவப்பணியை நன்கு மதித்து அவர்களுக்குப் பாராட்டுப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. இன்னுமிருக்கும் சைவத்தொண்டர்களை ஊக்குவித்த பெருமைக்கோ அளவில்லை. மேலும் ஒன்று சொல்ல விருமபுகிறேன். அருமையாகவும் பெருமையாகவும் சிறப்பாகவும் யாழ்ப்பாணச் சைவர்களின் சைவப் பண்பு மிளிரவும் சைவ மணமும் தமிழ் மணமும் வீசவும், வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத துறை விளங்கவும் எங்கள் முன்னோர்கள் அரும் பாடுபட்டு செம்மையான உள்ளத்தோடு தொடங்கி 75 வருட காலமாகநிலவி, பெரும் சிவப்பணியாற்றிவருகின்ற தெய்வ சாதனமாகிய இந்துசாதனமும் அதைச் சேர்ந்த அச்சகமும், என்றும்போல் நிலைத்துக் கடமைபுரியத் தோன்றாத்துணையான ஞானநடத்தரசன் அம்பலவாணரின் அருள் கைகூடுவதாக. இப்போது இந்துசாதனமும் அதைச்சேர்ந்த அச்சகமும் பொருளுதவியில்லாதுவருந்தும் நிலைமையை யார்தான் அறியார் யாழ்ப்பாணத்தில் சைவசமூகம் ஒன்று இருந்தால் அங்கே சைவப் பண்பு மேலும்மேலும் சிறக்க வேண்டுமென்றால் ஆறுமுக நாவலரையா அவர்களின் அரும்பெரும் தெய்வப் பணியை நினைந்துநினைந்து நாமெல்லாம் வேண்டிய தொண்டுகள் செய்தும் பணமுள்ளவர்கள் இயன்ற பொருளுதவி புரிந்தும் எம் சைவப் பண்பை நிலை நிறுத்த வேண்டும். அச்சிவப்பணி ஒருவிதமான இடரில்லாது செவ்வனே நடைபெற நாமெல்லா மொத்து முழைக்க வேண்டும். சிவம் வாழ்க. தமிழும் சைவமும் வாழ்க. இந்து சாதனமும் அதைச் சேர்ந்த அச்சகமும் வாழ்க.

பொ. அப்புக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருளமுதம்"
சமய சஞ்சிகை வெளிவருகிறது

—:—

மதுரை மஹாசன்னிதானம்; நல்லை தேவஸ்தான காவலர், 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜெகன்னாதன் ஆகியோரது நல்லாசியுடன் "அருளமுதம்" என்னும் சமயசஞ்சிகையின் ஆரம்ப விழா விஜயதசமி அன்று நடைபெற்றது. இதன் ஆசிரியர், நல்லூர் தேவஸ்தான வித்வான் சிவஸ்ரீ. சீ. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்கள். 'அருளமுதம்' முதல்இதழ் கந்தஷஷ்டிமலராக மலர்ந்துள்ளது சமயத்தொண்டே அடிப்படையாக ஷ அருளமுதத்தை மாதந்தோறும் தமதுசொந்தப் பொறுப்பில் வெளியிட முன்வந்துள்ளார் திரு மணிபாகவதர் அவர்கள். ந. நி.

—0—

திருக்கேதீச்சரத் திருப்பணி உபசபை

1-11-64 ல் அன்று புங்குடுதீவு கணேச வித்தியாசாலையில் திருக்கேதீச்சரச் சுவாமி கோயிற்றிருப்பணிக்கு நிதிசேர்க்கும் ஒழுங்குகளைப் புரிதற்கு ஒரு உபசபையை நியமிக்கச் சைவ மக்களின் பொதுக் கூட்டமொன்று தொண்டன் திரு. சி. சரவணமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸேர். கந்தையா வைத்தியநாதன், திருப்பணிச் சபைக் காரிய தரிசி திரு. த. சிவலிங்கம், திரு. மு. மயில்வாகனம், திருப்பணிச்சபை அங்கத்தினர் ஆகியோர் சமுகமளித்தனர். 15 பேரைக் கொண்ட ஓர் உபசபை நிறுவப்பட்டது. தலைவர் திரு. சி. சரவணமுத்து, உபதலைவர் திரு. ஆ. தம்பு, இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் பொன்னம்பலம், க. ஆறுமுகம், தனாதிகாரி திரு. சி. இ. சதாசிவம் பிள்ளை.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்
11 மேரி பெனடிக்ட்
—வழக்காளி

இல. MB. 5473
எதிராக
பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்
1 தம்பிமுத்து இராசையா
2. பெண் மேரி [வும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB. 5473 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1965ஆம் தைமீ 2-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 14875/- இன்னும் ரூபாய் 12500-க்கு 11-3-63 தொடக்கம் 5-11-63 வரைக்கும் 12%வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 215/85.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளிக்கோயிற்பற்று சுண்டிக்குளியிறை 'எலக்கட்டுவயல்' பர நில. இல. 3, 0 சுளி, புதுக்கல்வீடு, குசினி, கிணறு, செய்பயிர் வான்பயிர்களுடன். இதற்கெல்லை கிழக்கு, றோட்டு, வடக்கு அந்தோனிப்பிள்ளை பெண் மேரியாபிள்ளையினதனம், மேற்கு டேவிட் பெண் சிசிலியாவினதனம், தெற்கு வைரவி சின்னத்தம்பியினதனம் இதடங்கலும்.

செ. விசாகரெத்தினம்
கொமிசனரும்விலைமதிப்பாளரும்,
133 பருத்தித்துறைறோட்டு.
நல்லூர்,யாழ்ப்பாணம், 8-11 64,
M. 208 13-11-64.

சைவஉலகம் உய்யவந்த சைவப்பெரியார்

—:0:—

1-ம் பக்கத் தொடர்ச்சி

வில், விழா வடிவில், மலர் வடிவில் உலாவுகின்றார்கள். ஈழத்தின் நிலையோ இரங்கத்தக்கது. அங்கு மறைமலையடிகள் மறைந்தார்; மலைபோன்ற வரலாற்று நூல் காண்கின்றோம். பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார் மறைந்தனர்; ஆனால் நூல்வடிவில் வாழுகின்றனர்.

ஈழவள நாட்டில் நாவலருக்குப்பின் சைவக்காவலர் பலர் தோன்றினர்; அல்லும் பகலும் உழைத்தனர்; உழைக்கின்றனர். ஆனால் அவர்களின் வரலாறோ வரன்முறையாக எழுதப்படவில்லை; அவர்கள் எழுதிய நூல்களோ மறைந்துகொண்டிருக்கின்றன. இந்நிலையில் மாலைசூடி, மேளமடித்து, பெரு விளம்பரஞ் செய்யும் விழாக்களால் ஆம் பயன் தான் என்ன? ஆகவே சைவ சமூகமே! சிவபாதசுந்தரனார் பெயரில் விழித்தெழு! சிவனடியார்களைச் சிவன் எனக் கொள்! அடியார்க்கும் அடியேன் எனும் நிலையைச் செயலளவில் காட்டு, சைவச் சான்றோர் வரலாற்றை வரன்முறையாக எழுது.

கரிய பெரிய பூதமாகிய சிற்றிலக்கியப் போர்வையைப் போர்த்துக்கொண்டு இலக்கியவானில் நீச்சலடிக்கும் சிறு கதை மன்னர்களே சற்று வழிவிலகி ஞானிகள், சைவச் சான்றோர் கதைகள் பவனி வர வழிவிடுங்கள்.

ஆகவே சைவப்பெரியார் பற்றி நம் சிந்தனை சமய இலக்கியம் வளர, சைவ எழுத்தாளர் பெருக, சைவ நூல்கள் ஒளிபெற வழி செய்யுமாக. இதுவரை ஈழத்திலே தோன்றிய சைவ நூல்கள் தொண்டு செய்த சைவச்சான்றோர் வரலாறுகள் என்பவற்றைப் பகிரங்கம் செய்வோமாக. இதே நோக்கில் போக்கில் பல விழாக்கள், மகாநாடுகள் காண்போமாக. இவை சைவப்பெரியார் நாம் உய்யச் செய்த பணியை நாமுணர்ந்து நாம் வாழ வழிவகுக்கும்.

அரும் பெரும் அறிவுத் திறன் படைத்த நம் பெரியார் அடக்கமே உருவானவர். சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது அப்பர் சுவாமிகளின் தேவாரத்தை எடுத்தாழ்பவர். இவர் போதனையோடு சாதனையுஞ் செய்தவர்; சரியை வழிபாட்டிற் சிறிதுஞ் தவறாதவர் எனச் சைவ மெய்த்தொண்டர் ஒருவர் வாயூறுகின்றார். அவர் எந்நூலை எழுதினும், "அறிவாளர்கள் இதிலேயுள்ள குற்றங்களை எடுத்துக் காட்டுவார்களானால் இதற்குப் பெருந்துணை புரிபவரா வர்" என்பதுபோன்ற அமைவோடு அவை காணப்படும். இவ்வுரை அன்னாரைப்பற்றிய இக்கட்டுரைக்கே சாலப் பொருந்தும் என்க.

சைவ உலகம் உய்யவந்த சிவபாதசுந்தரனார் போன்ற பெரியார்களை நினைந்து நினைந்து சைவவுலகம் சிறப்புறுமாக.

—

ஜேர்மனியில் வட ...

—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

னும், தற்போது மிக முக்கியமானது. அங்கு முதல் வடமொழிப் பேராசிரியர் ஸ்ரென்கோனு ஆவர். அவருக்குப் பின் ஷுபிறிங் பேராசிரியர் ஆனார். இவர் முதலில் பேர்ளின் அரசாங்க நூலகத்தில் இருந்தவர். அவர் 1944-ல் வெளியிட்ட நூல் பேர்ளின் நூலகத்திலுள்ள 1127ல் ஜைனச் சுவடிகள் பற்றிய குறிப்புக்கள் கொண்ட பட்டியலாகும். அவர் ஜைன மதத்தில் விசேஷ ஆராய்ச்சித் திறன்உள்ளவர்; அவரது திறமையால் ஹம்பேர்க், ஜைன ஆராய்ச்சிக்குப் பெயர்பெற்றுள்ளது. இப்போது அங்கு சம்ஸ்கிருதப் பேராசிரியராக இருப்பவர் அல்ஸ்டோர்ஃப். பலமுறை இந்தியாவுக்கு வந்தவர். அலகபாத்தில் இரண்டாண்டுகள் ஒரு பண்டிதரிடம் வடமொழி கற்றவர். ஜைனமத அறிஞராகிய இவர் குமாரபாலபிரதிபோதம், ஜைனஹரிவம்ச புராணம், பிருகசுத் கதையின் மிகப் பழைய உருவம், பஞ்சதந்திரம் முதலியவற்றைப் பதிப்பித்திருக்கின்றார், இவரது ஆசிரியராகிய லூடர் எழுதிய வருணனை பற்றிய ஆராய்ச்சியை இவரே அவர் காலமாகியபின் பதிப்பித்துள்ளார். ஜேர்மனியில் [illegible] இந்நூல் [illegible] யாழ்ப்பாண பொதுஜன நூலகத்தில் உள்ளது). இதன் கையெழுத்துப் பகுதியின் ஒரு பகுதி யுத்தத்தில் தொலைந்து போயிற்று.

இந்திய அறிஞர் தோடர்மல் அச்சியற்றும் பொருட்டுத் தயாரித்து முற்றுப்பெறாத "பிராகிருத பைங்களத்'தின் கையெழுத்துப் பிரதியும் அவரிடமுள்ளது. அவருக்கு இந்தியாவின்பால் பெரிதும் அபிமானம் உண்டு. இந்தியத் தேசிய இயக்கம்பற்றி 1943லும், இந்தியாவுக்கும் ஜேர்மனிக்குமுள்ள ஆத்மீகத் தொடர்பு குறித்து 1942லும் நூல் எழுதியுள்ளார். 'இந்திய கணித சாஸ்திரத்தில் பிரத்யயங்கள். ஆயிரத்தொரு இரவுகள் இந்தியாவிலே தோன்றின என்பதற்கு இரு புதிய சான்றுகள் என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார், அவரது மாணவருள் ஒருவர் பிராகிருதத்தில் சிலாங்கர் எழுதிய 64 ஜைன சாவாகபுருவுரைப் பற்றிய நூலை வெளியிடத் தயார் செய்கிறார்.

ஹம்பேர்க் அரசாங்க சர்வகலாசாலை நூல்களில் 500க்கு அதிகமான தென்னிந்திய ஓலைச் சுவடிகள் உள்ளன.

பேர்ளினில் பழைய பல்கலைக்கழகத்தைவிடப் புதிய தொன்றும் மேற்குப்பிராந்தியத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் சமஸ்கிருதப் பேராசிரியராயிருக்கும் ஓலஃப் ஹன்சேன் வேத ஒப்பியல் ஆராய்ச்சியிலும், ஈரானிய மொழியிலும் ஈடுபட்டவர். அவரது மாணவர் ஒருவர் வேதப்பற்றி ஆராச்சி நூல் ஒன்று எழுதியுள்ளார். கிழக்குப்பிராந்தியத்திலுள்ள பழைய ஹம்போல்ற் சர்வகலாசாலையில் பேராசிரியராயிருக்கும் றூபன் பல துறைகளில் வல்லுநர். இராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். 1928-ல் நியாய சூத்திரங்களைப் பதிப்பித்தார். உபநிடதம்பற்றியும், தசகுமார சரிதம்பற்றியும் எழுதியுள்ளார். ஆனால் அவர் மாக்ஸீயத் தத்துவங்களுக்கு அடிமைப்பட்டுப் புதிய கோணத்தில் இருந்து பழைய ஆராய்ச்சிகளை நோக்குகிறார். இந்திய சிந்தனை வளர்ச்சியில் உலகாயதக் கொள்கையைத் தேடிப் பிடித்தல் கஷ்டமே என ஒப்புக்கொள்ளுகிறார் எனினும், 1954-ல் எழுதிய 'இந்திய இயலாராய்ச்சி இந்திய தத்துவ வரலாறு' என்னும் நூல்களில் அவரது கோணிய பார்வை காணப்படுகிறது. அர்த்த சாஸ்திரத்தில் ஊக்கம் செலுத்துகிறார். 1956-ல் முத்திராராக்ஷஸ நாடகம் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்.

சமய தீட்சை

—

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் இன்று 13-11-64 நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற சமய தீட்சையில் 45 பேர் பங்குபற்றினர்.

—

சைவபரிபாலனசபைத் தீர்மானங்கள்

—0—

8-11-64 ல் அன்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையின் நிருவாக சபைக் கூட்டத்தில் கீழ்வருந் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 தேவாரம் பாடப்பெற்ற 'திருக்கோணாசலம்' என்னும் பழைய சிவத்தலம் நிறுவப்பட்டிருக்கும் தானத்தையும் அதனருகிலுள்ள சைவத் தொடர்புள்ள தானங்களடங்கிய பிடறெறிக் கோட்டையையும் சைவமக்களுடைய புனித இடமாகப் பிரகடனஞ் செய்யும் வண்ணம் அரசாங்கத்துக்கு மனுச் செய்யவேண்டும்.

2 நெடுந்தீவிலேயுள்ள மகாவித்தியாலயத்தில் நூற்றுக்கு 85 வீதத்துக்கு மேற்பட்ட சைவப் பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். ஒரு பாடசாலையிலே எந்த மதப் பிள்ளைகள் அதிகமாகக் கல்வி பயில்கின்றார்களோ அப்பாடசாலையின் அதிபர் அம்மதத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்ற கல்விப் பகுதியின் கொள்கைப்படி மேற்குறித்த பாடசாலைக்கு ஒரு சைவ சமயத்தை அனுட்டிக்கும் தலைமையாசிரியரை நியமிக்கும்வண்ணம் வித்தியாதிகாரிக்கு மனுச்செய்ய வேண்டும்.

இவ்வாரம் 15-11-64 — 21-11-64
உங்கள் பலன்?
[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தொழிலில் தொல்லை, சுகக்குறைவு, நிம்மதிக்குறைவு. பெண்களால் தொல்லை,

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

வயிற்றுக்கோளாறு, தொழில்களில் தடை: தாயின் சுகக்குறைவு, கலகங்களுக்கு முந்துதல். விவசாய விருத்தி.

மிதுனராசி மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

தடைகளை வெல்லுதல், புது முதலீடுகளால் பயன், நிலங்களால் நன்மை, புகழ் வரவு, இன்பமான வாழ்க்கை,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

உறவினரால் தொல்லை, சுகக்குறைவு, கண்நோய். பண நஷ்டம், ஞாயிறு காலை எச்சரிகைக, குடும்பக்குழப்பம்,

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

ஞாயிறு பிற்பகல், திங்கள் செவ்வாய் எச்சரிக்கை. எஞ்சிய காலம் தொழில்களுக்கு உகந்தது பண வரவு. சுகக்குறைவு.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பகைவர்க்குத்தோல்வி, செல்வாக்கினால் காரியங்கள் சித்தியடையும். செவ்வாய் பிற்கல, புதன், வியாழன் கவனம், உறவினரால் துன்பம், நிம்மதி குறையும்.

துலாம், சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

வெற்றிக்குக் கடும் உழைப்பு வேண்டும். நிலங்களால் நன்மை, குடும்பக்கருமங்கள் நிறைவேறும், வியாழன் பிற்பகல், வெள்ளி, சனி கவனம்,

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சுகக்குறைவு, உறவினரால் தொந்தரவு, தொழில் அதிகம், வரவு குறையும், புறங்கூறுபவர்களிடம் எச்சரிக்கை. சனி பிற்பகல் எச்சரிக்கை,

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பணவரவு, விவசாய விருத்தி, பணியாளரால் உதவி, குடும்பத்தில் குழப்பம்.

மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பகை நீங்கும், துன்பத்தில் நண்பர் உதவி, தொழில் அதிகம் வெற்றி உண்டு, சிறு விபத்துகள்

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

பண வரவு, பழைய முதலீடுகளால் பயன், சுகக்குறைவு, நிம்மதி நீங்கும்,

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி. 1, 2, 3ம் பாதம்

பண வரவு தடைகளை வெல்லுதல், தொழில் மாற்றம், உறவினரால் தொல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு விளம்பரம்

1. L. W, பொன்னுத்துரையும் மனைவி
2. கிறேஸ் ஞானம்மா பொன்னுத்துரை.

நல்லூர், யாழ்ப்பாணம் — வழக்காளிகள்

இல. M.B, 5147

எதிராக

1. செல்லன் சின்னப்போடியனும் மனைவி
2. செல்வதி,

கோப்பாய் தெற்கு —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு M,B. 5147 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் காணி 1964 ஆம் ஆண்டு மார்கழிமாதம் 26-ம்திகதி சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- ரூபா 630-ம் 3-10-62 தொடக்கம் 17-12-63 வரையில் ரூபா 500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுத்தொகைக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 148/93-ம்.

இந்தக்காணி பிரசித்த நொத்தாரிஸ் C. T. குமாரசாமியால் 1959-ம் ஆண்டு தைமாதம் 7-ம் திகதி எழுதப்பட்ட 4138 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுறுதியின்படி ரூபா 1500-க்கும் இதற்குப் 12 வீதவட்டிக்கும் முதலாம் ஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆதனடாப்பு:

வடமராகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை "கோட்டைவாசல்" நில. பர. லாச்சம் ஒன்றும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வீடும் பயிர்களும்.

இந்தக்காணிக்கு எல்லை கிழக்கு மாணிக்கன் கைப பெண் இலட்சுமியின் ஆதனம், வடக்கு மேலே சொல்லப்பட்ட இலட்சுமியின் ஆதனமும் கிணறும், மேற்கு யோசேப்பு பெண் சவக்கொழுந்துவின் ஆதனம், தெற்கு றோட்டும், மேலே சொல்லப்பட்ட கிணறு வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், கிழக்குக்காணிக்குப் புறநீங்கலாக,

முற்பதிவு: K 218/148.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
"முருகன் இல்லம்"
இணுவில், 11-11-64.
M 211 13-11-64.

கோட்டு விற்பனவு விளம்பரம்

தத்துவவழக்கு இல. 1282

சந்திரசேகரப்பிள்ளை கைம்பெண் இரத்தினம் —தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1282 ஆம்இலக்கம்கொண்ட தத்துவ வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும்காணி 1964-ம் ஆண்டு மார்கழி மாதம் 17 ம் உ வியாழக்கிழமை முற்பகல்10மணி தொடக்கம் மேலே விபரிக்கப்படும் காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்பற்று இணுவிலிறை 'வத்துவினி' பர நில லாச்சம் 7 குளி 12 இதில் நிந்தமாக மேற்குப் புறமாக பர நில லாச்சம் 5 இந்தக் காணிக்கு எல்லை கிழக்கு இதில் மிகுதியான காணி வடக்கு கார்த்திகேசுபெண் இரத்தினத்தினாதனம். மேற்கு காத்திகேசு கந்தையாவினதும் பங்காளர்களினதும் ஆதனம். தெற்கு காத்திகேசு கந்தையாவினதும் ஆறுப்பிள்ளை மாணிக்கத்தினதும் ஆதனமும், மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும், மிகுதியாயிருக்கப்பட்ட காணிக்குத் தண்ணீர்ப்பங்கும், வாய்க்கால் வழி உரித்தும் புறநீங்கலாகவும், இக்காணியிலிருந்து றோட்டுக்கு வரவு செய்ய ஒழுங்கையில் பாவிப்புரித்தும்.

க. செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
முருகன் இல்லம்,
இணுவில், 11-11-64,
M, 210 13-11-64,

யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வண்ணார்பண்ணை மேற்கு

வேலு பொன்னு —வழக்காளி

MB-5265

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு

முருகேசு கணபதிப்பிள்ளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டின் MB 5265-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக காணிகளை 1964 ஆ மார்கழி மீ 19 உ 19-12-64 சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1707/20-ம். இதில் ரூபா 1000-க்கு 7-12-62 தொடக்கம் 5-9-63 வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியையும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியையும் கோட்டுச்செலவில் செலவழித்த செலவு ரூபா 128/05, வெலியாத்துச் செலவு ரூபா 42/62½. எதிர் வரும் செலவு ரூபா 29/50, முழுவதுமாக ரூபா 200/17½,

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோவிற்பற்று அல்லைப்பிட்டியிறை,

1, நறுவிலியடி நில.பர. 4 3/8 நாலேயரைக்காலும் பனை வடலிகளும், செய்பயிர் வான்பயிர் வகைகளும், எல்லை கிழக்கு செல்லத்தம்பி பெண் சிவகாமிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு செல்லத்தம்பி கந்தசாமிக்குரிய ஆதனம், தெற்கு சிதம்பரநாதர் கந்தையாவுக்குமுரிய ஒழுங்கையும் கீழ்க்காணும் 2-ம் ஆதனமும் இதடங்கலும்,

2, ஷை அல்லைப்பிட்டி யிறை. "பெருமாள் தோட்டம்" நில.பர. 3 மூன்று குளி 17½ பதினேழேகாலும் கிணற்றுப்பங்கும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு வண்ணை வயித்தீஸ்வரன் கோவிலுக்கும் செல்லத்தம்பி பெண் சிவகாமிப்பிள்ளைக்கு முரிய வாதனங்கள், வடக்கு மேலே சொல்லப்பட்ட ஆதனம், மேற்கு சிதம்பரநாதர் கந்தையாவுக்குரியவாதனம், தெற்கு சின்னப்பு கனகசபைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்,

3, ஷை அல்லைப்பிட்டி இறை "வளவிற் தோட்டம்" நில.பர, 5 ஐந்தும் கிணற்றுப்பங்கும், எல்லை கிழக்கும் மேற்கும் வயித்திலிங்கம் செல்லத்துரைக்குமுரிய ஆதனங்கள், வடக்கு சின்னத்தம்பி மாரிமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதடங்கலிற் சொரியலாய் 1/4 பங்கும் இதடங்கலும்,

க. சுப்பிரமணியம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
24-ம் நம்பர், 1-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம், 4-11-1964.
M 206 13-11-64.

அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் பிரதான வீதி, 65-ம் இலக்கத்தில் அடைவு பிடிக்கும் திரு. அ, ச. மகாதேவா அவர்களிடம் 23-4-59 தொடக்கம் 13-3-61 வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 1964-ம் ஆ டிசம்பர் மீ 4 - (4-12-64) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
ஏலவிற்பனவாளரும்,
விலைமதிப்பாளரும்,
"இராசகிரி"
643 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 12-11-64.
M. 212 13, 20-11-64.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
மாவட்டக்கோட்டில்

கரையூர், யாழ்ப்பாணம்

1. ஜோன் பிடேலிஸ் சிக்மறிங்கமும்
2. பெண் தெரஸம்மா சிக்மறிக்கம். — வழக்காளி.

இல. M.B. 6190

எதிராக

கரையூர், யாழ்ப்பாணம்

1, ஆசீர்வாதம் செல்லத்துரை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 6190 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1964-ம்ஆ மார்கழிமீ 26-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 4382/- இன்னும் ரூபாய் 3000-க்கு 18-11-63 தொடக்கம் 3-7-64வரைக்கும் 12%வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை சட்டவீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 407-95 சதமும்.

காணிகளின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குழிக்கோயிற்பற்று கரையூரிறை "பறையன் மணற்காடு" பர. நில. இலா, 0-5 7/10, குழி, வீட்டில் உள்ள வடக்கறை, கடைக்கட்டிடம், குசினி இன்னுமதைச் சேர்ந்த வகைகளும். இதற்கெல்லை கிழக்கு கீழ் விபரிக்கப்பட்ட இரண்டாம் காணி, வடக்கு ஒழுங்கை, மேற்கு நீக்லான் சூசைப்பிள்ளையினுரிமையாளரினாதனம், தெற்கு கடற்கரை றோட்டு இதடங்கலும். பதிவு இல. D 273/170,

ஷை இறை "பறையன் மணற்காடு" பர நில, இலா, 0-5 7/10 குழி, கல்வீடு, குசினி, செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை வழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு மேலே விபரிக்கப்பட்ட முதலாம் காணி, தெற்கு கடற்கரை றோட்டு, இதடங்கலும். பதிவு இல, D 253/89.

மேற்படி இருகாணிகளும் ஜெமனு வேல் உலாந்தா அவர்களால் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பெரியகோடு பிறிவிடுதல் வழக்கு இல. 2600-ல் இணைகப்பட்டிருக்கும் 27-4-1948 திகதி இல, 123A கொண்ட உலாந்தா படத்தில் முதலும் இரண்டாம் துண்டுகளாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது,

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
133 பருத்தித்துறை றோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்
8-11-64,
M 207 13-11-64

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க, செ, த. செ. செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-62 முதல் 31-3-63 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள், 10-12-64 திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து, மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக, மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்,

C. Ragunathan
Auctioneer.

வண்-மேற்கு, யாழ்ப்பாணம்.
10-11-64,
M. 209 13, 20-11-64.

கோட்டு விற்பனவு விளம்பரம்

கிரிமலை நாகலிங்கம் செல்லத்துரை —வழக்காளி.

எதிராக

இல MB 4528

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சிவன்கோவில் தோட்டம்

1. வேலு கந்தையா
2. பெண் பாறுபதி

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிகோட்டில் MB 4528ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1964 ம் ஆண்டு டிசெம்பர் (மார்கழி) மாதம் 16ம்திகதி(16-12-64) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4333-34 சதம். இதில் ரூபா 4000 க்கு 18-1-62 திகதி தொடக்கம் 12-6-62 திகதி வரைக்கும 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் முழுதொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 224-10 சதம். மொத்தம் ரூபா 5314-98 சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை, 'நீர்ஞேச்சியும் நீர்ஞேச்சியடியும்" நிலப்பரப்பு 30. இது நிலப்பரப்பு 20-ம். நிலப்பரப்பு 10-ம் சேர்ந்தது. இது உத்தரவுபெற்ற உலாந்தா யே டீ. வீரசிங்கத்தால் 28-1-48-ல் 2242-ம் இலக்கப்படத்தில் 8-ம் துண்டுக்கு நிலப்பரப்பு 2-ம் குளி 13-ம், கல்வீடும், மற்றும் பயிர்களும், 10-ம் துண்டில் இருக்கும் கிணற்றில் பங்கும், 15-ம் துண்டு வழி வாய்க்கால் பாவிப்புரித்தும், றோட்டுக்குப் போகும் 15-ம துண்டு ஒழுங்கையும். 6-ம் துண்டில் இருக்கும் கிணற்றில் உரிமை புறநீங்கலாகவும், எல்லை கிழக்கு கைஒழுங்கை வடக்கு பரமநாதர் சரவணப்பெருமாளின் ஆதனம், மேற்கு 1-ம் துண்டும், கை ஒழுங்கையும. 15-ம் துண்டும், தெற்கு 9-ம் துண்டு, ஆனால் 16-ம் துண்டுகாரருக்கு 16-ம்துண்டின் வடக்கு வேலியும், 16-ம் துண்டுக்கு மேற்கேயுள்ள ஒழுங்கையின் கிழக்கு மேற்கு வேலிகள் 16-ம் துண்டுக்காரருக்கு நிந்தமாகவும். மிகுதியடங்கலும்

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner, Valuer,
& Licenced Auctioneer
தெல்லிப்பழை, 3-10-1964
M 213 11-11-64

அணிந்துரை அரங்கம்

விவேகானந்தன்

கொழும்பு விவேகானந்தசபை வெளியீடு (புரட்டாசி - ஐப்பசி)
விலை சதம் 10
அங்கத்தவர்களுக்கு இலவசம்.

கொழும்பு விவேகானந்த சபைக் கௌரவ காரியதரிசி நாத்திகர்களுக்கு எதிரானஐக்கியமுன்னணிகொண்ட 5 அம்சத் திட்டம் ஒன்றினை வெளியிட்டிருக்கின்றனர். எஸ்.குஞ்சிதபாதக் குருக்களால் எழுதப்பட்ட நவக்கிரக வழிபாடு 'சோமவார விரதம்' என்ற கட்டுரைகளும் திருக்கோணமலையைப்பற்றிய கட்டுரைகளும் அதில் காணப்படுகின்றன. கொழும்பு விவேகானந்த சபையின் நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சென்ற 62 ஆண்டுகளுக்குமுன் சைவப் பெரியோர்களால் தாபிக்கப்பட்ட ஒரு தாபனத்தின் சமயப் பிரசாரத்துக்கு இத்தகைய பத்திரிகை அவசியமானதே. நாட்டில் தெய்வக்கொள்கையைப் பரப்புவதற்கும் அது உறுதுணையாகவிருக்கும்.

உயர்தரக் கல்வியை நாடிச் சென்றனர்

திரு. அஜிற் அரவிந்தன் முத்துக்குமாரசுவாமி அவர்கள் 28-10-64 அன்று "லாயொஸ்" என்னும் கப்பலில் இங்கிலாந்துக்கு உயர்தரக்கல்விகற்கக் சென்றனர்.

இவர் கொழும்பு அர்ச். யோசெப்கல்லூரியில் கற்றுத் தேர்ச்சி அடைந்தபின், பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1962-ல் சட்ட பட்டதாரியாகத் தேறினர். அவர் பல்கலைக்கழகத்து நீச்சல் கப்ரினாக இருந்ததுடன், தமது மார்க்கஸ்பெர்ணாந்து விடுதிச் சாலையில் மேசைப்பந்து, மல்யுத்தம் முதலியனவற்றிலும் கப்ரினாக விளங்கினர்.

1963-ம் ஆண்டு இலங்கைச் சட்டக்கல்லூரி நியாயதுரந்தரர் அட்வக்கேற் பரீட்சையில் சித்தி எய்தினர். அவர் 11-10-64 அன்று நீதிபதிகள் ஸ்ரீஸ்கந்தராஜா, அலெஸ் முன்பாக அட்வகேற்றாகச் சத்தியப்பிரமாணம் எடுத்தார். நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா இவரைத் தமிழிலே வாழ்த்தினர்.

இவர் கொழும்பு அர்ச். யோசெப் கல்லூரி ஆசிரியர் திரு, வை. முத்துக்குமாரசுவாமி அவர்களதும் கொட்டாஞ்சேனை நல்லாயர் மடத்து ஆசிரியை திருமதி. தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி அவர்களது ஒரே மகன். தந்தை தாய் இருவரும் பயிற்றப்பட்ட கலைப்பட்டதாரிகள். இவர் 25 வயது நிரம்பப்பெறுதவர். இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளும், நீண்ட சுபீட்சமும் நல்குவாராக!

மலைமகளே! சூரியன் ஆயிரக் கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிறார். ஆனால் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனால் முடியாது. உமது கோமள கரமான பாதங்களால் ஆமைக்களுக்கு புறம்பும் உள்ளும் இருளை அகற்றி ஆட்கொள்ளுகிறீர்.

-நாராயணபட்டோத்திரி.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுன்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 13-11-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org